விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

1. நட்சத்திரக் குறியீடுகளில் (⋆) காட்டப்பட்டுள்ள பகுதிகள் கட்டாயமாகப் பூரணப்படுத்தப்பட வேண்டும். மற்றைய பகுதிகளை தங்களுக்கு உரிய வகையில் பூரணப்படுத்த வேண்டும்.

2. **இதன்போது நீங்கள் உண்மைத் தகவல்களை உள்ளடக்க வேண்டும். பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்படுமாயின் நீண்ட காலத்திற்கு பரீட்சைக் கடமைகளிலிருந்து விலக்கப்படுவீர்கள்.**

3. விண்ணப்பப் படிவத்தில் எல்லாப் பகுதிகளையும் பூரணப்படுத்தி Submit button இனைக் Click செய்த பின்னர் தங்களது விண்ணப்பப் படிவத்தை PDF வடிவில் தரவிறக்கம் (Download) செய்துகொள்ள முடியும். அந்த விண்ணப்பப் படிவத்தின் வன்பிரதியொன்றை (Hard copy) நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. அவ் வன்பிரதியின் சில பகுதிகளை கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட வேண்டியதுடன், 11 (a) பகுதி (நேர அட்டவணை) கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட்டு பாடசாலையின் அதிபரினால்/ பிரதி அதிபரினால்/ உப அதிபரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

5. இது வரையில் விடைத்தாள் பரீட்சிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. **உரிய வகையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

7. உரிய பாடசாலை அதிபரினால் / நிறுவனத் தலைவரினால் **பகுதி 16** பூரணப்படுத்தப்பட்ட பின்னர் விண்ணப்பப் படிவம் 2020.07.10 ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

   பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>
   மதிப்பீட்டுக் (பாடசாலை பரீட்சைகள்) கிளை,<br>
   இலங்கை பரீட்சைத் திணைக்களம்,<br>
   த. பெ. 1503,<br>
   கொழும்பு.

8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் G.C.E. A/L 2020” எனக் குறிப்பிடல் வேண்டும்.

9. இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பப் படிவத்தின் பக்கம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் உங்களது கவனத்தைச் செலுத்தவும்.

10. தங்களுக்கு மேலதிக விவரங்கள் தேவைப்படின் கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

| | | |
|---|---|---|
| D.P. ரஞ்சித் தர்மகுண | - பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) | - 011 2784037 |
| L.G.S. சமரகோன் | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) | - 011 2785216 |
| S.P. ஆரியரத்ன | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) | - 011 2785231 |
| A.R.K. பீரிஸ் | - உதவிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) | - 011 2785231 |
| A. கிருஷ்ணகோபி | - உதவிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) | - 011 2785216 |

மதிப்பீட்டுக் கிளை (பாடசாலைப் பரீட்சைகள்) 011 2785231